இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை (இரண்டாம் அரையாண்டு) - **2006/2007**

**ESP 1109-** சிறுவர் உரிமைகள்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள் 111

---

திகதி: 02.12.2007 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

---

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

01. சிறுவர்களின் நிலைமைகளை முன்னேற்றுவதற்கு போர்த்துக்கேயர், டச்சுக்காரர் ஆட்சிக் காலத்தில் எடுக்கப்பட்ட படிமுறைகளை சுருக்கமாக விளக்குக.

02. சிறுவர் நலநோம்பு கொள்கைகள் தொடர்பாக 1939இல் அமுல்நடத்தப்பட்ட நடவடிக்கைகளை பட்டியற்படுத்துக.

03. சிறுவர் உரிமைகளை நிர்ணயிக்கும் அடிப்படைக் கோட்பாடுகளைக் குறிப்பிடுக.

04. பிள்ளை உயிர் பிழைத்து வாழ்வாற்கு அச்சுறுத்தலாக அமையும் ஆபத்துக்காரணிகளைக் குறிப்பிடுக.

05. சிறுவர்களின் "பங்கேற்கும் உரிமை" எனும் பதத்தின் கருத்தினை சுருக்கமாக விளக்குக.

06. இலங்கையில் அதிகம் காணப்படும் ஐந்து வகை சிறுவர் துஷ்பிரயோகங்களைப் பட்டியற்படுத்துக.

07. சிறுவர் உரிமைகள் தொடர்பாக பயன்தரவல்ல தொடர்பாடலைப் பாதிக்கும் காரணிகளை இனங்காண்க.

08. இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகத்தினை எம்மால் பூரணமாகத் தடுக்க முடியாமைக்கான மூன்று பிரதான காரணங்களைத் தருக.

(08 x 05 = புள்ளிகள்)

## பகுதி II

09. I. குடியேற்ற நிலைமைக்கு முற்பட்ட காலத்தில் சிறுவர் உரிமைகள் தொடர்பாக நிலவிய நிலைமை பற்றி விபரிக்க.

(08 புள்ளிகள்)

II. சுதந்திரத்திற்குப் பின்னர் உள்ள காலப்பகுதிகளில் சிறுவர்களது உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட படிமுறைகளை விளக்குக.

(12 புள்ளிகள்)

10. I. சிறுவர் தொடர்பான "உரிமைகள், தேவைகள், கடமைகள்" எனும் பதங்களுக்கிடையிலான வேறுபாட்டினை வித்தியாசப்படுத்துக.

(08 புள்ளிகள்)

II. சிறுவர் உரிமைகளுக்கான அடிப்படை கோட்பாடுகளினை நிலைநிறுத்துவதற்கு தாக்கம் செலுத்தும் தடைகள்/வரையறைகளை பரீட்சிக்க.

(12 புள்ளிகள்)

11. I. உயிர் வாழ்வதற்கும் விருத்திக்கும் உரித்தான சிறுவர் உரிமைகள் தொடர்பான பிரதான எழுவினாக்களை(issues) விளக்குக.

(08 புள்ளிகள்)

II. உயிர்வாழ்தல் மற்றும் விருத்திக்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்கு அரசினால் எடுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை பரீட்சிக்க

(12 புள்ளிகள்)

12. I. சிறுவர்களின் சமூக விருத்தியில் பெற்றோர் வளர்ப்பு முறையின் வினைத்திறனை விபரிக்க.

(08 புள்ளிகள்)

II. சிறுவர்களுக்கு குடும்பத்தில் வளர்ப்பு முறைகளில் ஏற்படும் பாதிப்புக்களை நிவர்த்தி செய்வதற்கு பாடசாலைச் சூழலை ஒழுங்கமைத்துக்கொள்ளும் முறையினை விளக்குக.

(12 புள்ளிகள்)

13. I. இலங்கையில் முறைசார் கல்வி முறையில் சிறுவர் உரிமைகளை ஒன்றிணைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

II. பிரதிகூலங்கள் அல்லது குறைகள் உள்ள சமுதாயங்களுக்கு சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான தொடர்பாடலுக்குரிய தந்திரோபாயங்களை சிபாரிசு செய்க.

(10 புள்ளிகள்)

14. I. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினுக்கு சிறு குறிப்புகள் எழுதுக.

I. சிறுவரின் ஆளுமை விருத்தி

II. சுவீகாரம்

III. இலங்கையின் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

IV. சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சமவாயம்

V. கடின(விசேட) சூழ்நிலைகளுக்குட்பட்ட சிறுவர்கள்

(20 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)